# 2. அனிச்ச மலர்

## அலகு அறிமுகம்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி என்னும் பெருமைபெற்றது தமிழ் இனம். அத்தகைய பழமையும் பெருமையும் பெற்றதே நம் கலாச்சாரமும் பண்பாடும். மற்றவரை மதிக்கும் குணமும் விருந்தோம்பலும் அன்பும் இரக்கமும் நிறைந்திருப்பதே பாரதப் பண்பாடு. பண்டைய மக்களின் ஒற்றுமை உணர்வும் விருந்தோம்பல் போன்ற தமிழர்க்கே உரிய உயர் குணங்களும் நம் பண்பாடு நமக்குக் கற்றுத் தந்த பாடங்கள். இவ்வுயர் குணங்களையும் பண்பாட்டை யும் கற்கும் வயதிலேயே மாணவர்களிடம் உருவாக்க வேண்டியது நமது கடமையாகிறது.



இவ்வலகில் திருக்குறள் ஒழுக்கமுடைமை அதிகாரம், இலக்கியங்கள் கூறும் விருந்தோம்பல், நேர்மையைக் கூறும் சிறுகதை, ஓணம் மற்றும் நமது பாரத விழாக்கள் பற்றிய கட்டுரை ஆகியவை இடம்பெறுகின்றன. அனுபவக்குறிப்பு எழுதுதல், வாழ்த்து அட்டைகள் தயார் செய்தல், மலர் தயாரித்து வெளியிடுதல் போன்ற திறன்களை மாணவர்கள் பெறும் வகையில் அலகு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மனதில் கொண்டு பாடச் செயல்பாடுகளை வடிவமைத்துக் கொள்வீர்கள் அல்லவா?

### நேரம்

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்:
24 பிரிவேளைகள் (சுமார்)

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- இலக்கியங்கள் கூறும் நல்லொழுக்கக் கருத்துகளைத் தெரிந்துகொள்கிறார்கள். அதன் அடிப்படையில் கதை, கட்டுரைகள் எழுதுகிறார்கள்.
- அனுபவக்குறிப்பு எழுதுகிறார்கள்.
- பொன்மொழிகள் சேகரிக்கிறார்கள்.
- விழாக்களுக்கான வாழ்த்து அட்டைகள் தயாரிக்கிறார்கள்.
- விழாக்கள், பண்டிகைகளோடு தொடர்புடைய பாடல்கள் சேகரிக்கிறார்கள்.
- படங்கள், செய்திகள் சேகரித்து மலர் வெளியிடுகிறார்கள்.
- ஒரு பொருளின் அடிப்படையில் கருத்துகளைச் சேகரித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.

## கற்றல் துணைக் கருவிகள்

- அலகோடு தொடர்புடைய பாடல் தொகுப்பு.
- விழாக்கள், பண்டிகைகள் - படத்தொகுப்பு.
- நூலகத்திலுள்ள இலக்கியப் புத்தகங்கள்.
- சிறுகதை, கவிதைப் புத்தகங்கள்.

## அலகிற்குள் செல்லும்முன்

- திருவள்ளுவர் படம், இன்னும் இளங்கோவடிகள், தொல்காப்பியர் போன்ற புலவர்களின் படங்கள் கிடைத்தால் அவற்றையும் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- ஓணம் பற்றிய படங்கள், செய்திகள் திரட்டித் தொகுப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.
- கிறிஸ்துமஸ், தீபாவளி, புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தயார் செய்த வாழ்த்து அட்டை ஒன்றும் இருக்கட்டும்.
- பண்டிகைகள் பற்றிப் பாடல் தொகுப்பு ஒன்று ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.
- முன் வருடங்களில் நீங்கள் பிற மாணவர்களை வைத்துத் தயாரித்த கையெழுத்து மலரையும் வைத்துக்கொள்ளுங்கள்.

## அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ✧ திருக்குறளில் நல்லொழுக்கக் கருத்துகள் உள்ளன. விருந்தோம்பல் என்ற குணம் பல இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது ஆரம்பம், முடிவு, மையக்கருத்து அடிப்படையில் கதை எழுதுதல் | • *நல்லொழுக்கக் கதைகள்* | ✧ இலக்கியங்கள் கூறும் நல்லொழுக்கக் கருத்துகளைத் தெரிந்துகொள்கிறார்கள். அதன் அடிப்படையில் கதை எழுதுகிறார்கள். |
| ✧ சொந்த அனுபவங்களைச் சுவை படக் கோர்வையாகக் கூறுதல் | • அனுபவக் குறிப்பு | ✧ அனுபவக் குறிப்பு தயாரிக்கிறார்கள். |
| ✧ பழமொழிகள்/மொன்மொழிகள் வேறுபாடு அறிதல் பயன்படுத்துதல் | • பொன்மொழிகள் சேகரிப்பு | ✧ பொன்மொழிகள் சேகரிக்கிறார்கள். |
| ✧ பலவிதமான வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், வடிவமைப்பு, வாழ்த்துக் கவிதை, சொற்கள் பயன்படுத்துதல் | • வாழ்த்து அட்டை | ✧ விழாக்களுக்கான வாழ்த்து அட்டைகள் தயாரிக்கிறார்கள். |
| ✧ பொருத்தமான பாடல் சேகரித்தல். பாடுதல் | • விழாக்கள், பண்டிகைகள் பற்றிய பாடல்கள் | ✧ விழாக்கள், பண்டிகைகள் பற்றிய பாடல்கள் சேகரிக்கிறார்கள். |
| ✧ படங்கள், செய்திகள் திரட்டுதல், மலர் வடிவம் கொடுத்தல் | • மலர் வெளியீடு | ✧ படங்கள், செய்திகள் சேகரித்து மலர் வெளியிடுகிறார்கள். |
| ✧ முன்னுரை, முடிவுரை, பொருள், பத்தி பிரித்துக் கட்டுரை எழுதுதல் | • கட்டுரை | ✧ கருத்துகளைச் சேகரித்துக் கட்டுரை எழுதுகிறார்கள். |

## நுழைவுச் செயல்பாடு

திருவள்ளுவர் படம் ஒன்றை வகுப்பில் தொங்க விடுங்கள். இவரைப் பற்றித் தெரியுமா என்று கேட்டுக் கலந்துரையாடலைத் தொடங்குங்கள்.

இவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

இவரது இன்னொரு பெயர் தெரியுமா?

யாராவது ஒரு திருக்குறள் சொல்லமுடியுமா?

இதுபோன்ற கேள்விகள் கேட்டு, திருக்குறளின் பெருமை, திருவள்ளுவரின் பெருமை போன்றவற்றை எடுத்துக்கூறி வள்ளுவர் எழுதிய திருக்குறளில் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்கள் நம் பாடப்பகுதியில் உள்ளன. வாசித்துப் பார்க்கலாம் என்று கூறிப் பாடப் பகுதிக்குள் செல்லலாம்.

### ஒழுக்கமுடைமை : திருக்குறள்

★ பத்துக் குறள்களையும் மாணவர்கள் ஒவ்வொருவரும் வாசிக்கட்டும். நீங்கள் ஒரு முறை தெளிவாக வாசியுங்கள். குழந்தைகள் கருத்தூன்றிக் கேட்கட்டும். இசைபடப் பாடவும் முயற்சி செய்யலாம். திருக்குறள் ஒலிப்பதிவுக் குறுந்தட்டுகள் இப்போது விற்பனைக்கு வந்துள்ளன. முடிந்தால் அவற்றைப் பயன்படுத்துங்கள்.

★ தவறுகள் இல்லாமல் வாசிப்பது யார்?

★ பொருள் தெரியாத புதிய சொற்களுக்கு அகராதி பார்த்துப் பொருள் கண்டுபிடிக்கட்டும். உதவுங்கள்

★ *விழுப்பம் - உயர்வு*

★ *இழுக்கம் - ஒழுக்கம் தவறுதல்*

★ *அழுக்காறு - பொறாமை*

★ *உரவோர் - அறிஞர்*

★ *ஏதம் - துன்பம், குற்றம்*

★ *எய்துவர் - அடைவர்*

★ *வழுக்கியும் - தவறியும்*

★ *ஒல்கார் - ஒதுங்கமாட்டார்*



**கருத்துகளைக் கூறும் குறட்பாக்களைக் கூறுங்கள்**

எல்லாக் குறள்களுக்கும் கருத்துகளை எழுதிவைத்துக் கொள்வீர்கள் அல்லவா?

கருத்துகளுக்குப் பொருத்தமான குறள்களை இணைத்துவைத்துக் கொள் ளுங்கள்

பாடப்பகுதியிலிருந்து சிறு சிறு வினாக்களும் தயாரித்துக் கொள்ளுங்கள்

- திருக்குறள் - நூற்குறிப்பு எழுதுங்கள்
- திருவள்ளுவர் - குறிப்பு எழுதுங்கள்
- நன்றிக்கு விதை போன்றது எது?
- ஒருவருக்கு உயிரைவிட மேலானது எது?

இப்பொழுது நான் ஒரு குறளுக்கான பொருளைக் கூறுகிறேன். அதற்கான குறளை நீங்கள் கூறுங்கள் பார்க்கலாம் என்று கூறி **நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தையே தரும்** என்று கூறுங்கள். மாணவர்கள் நன்றிக்கு வித்தாகும் என்ற குறளைக் கண்டுபிடித்துக் கூறி விடுவார்கள் அல்லவா? தொடர்ந்து எல்லாக் குறள்களுக்கும் பொருள் கண்டுபிடித்துச் செயல்பாட்டை நிறைவு செய்வார்கள் அல்லவா? திருக்குறள்களையும் அவற்றிற்கான கருத்தையும் வகுப்புக் குறிப்பேட்டிலும் எழுதச் செய்யுங்கள்.

**திருக்குறள் . . .சில செய்திகள் . . .**

*ஒரே தலைப்புக் கொண்ட இரண்டு அதிகாரம்
**71 குறிப்பறிதல் - பொருட்பால்**
**110 குறிப்பறிதல் - இன்பத்துப்பால்**
*வள்ளுவர் பயன்படுத்தாத தமிழ் எழுத்து **ஔ**
*ஓலைச் சுவடியில் இருந்து அச்சிடப்பட்ட ஆண்டு 1812
*உலகிலேயே **அதிக மொழிகளில்** மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்
*மொத்த குறட்பாக்கள் 1330
*மொத்த எழுத்துக்கள் 42,194
*முதலில் உரை எழுதியவர் **மணக்குடவர்**
*முதன் முதலில் வேறு மொழியில் மொழி பெயர்த்தவர் - **வீரமாமுனிவர்**

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்ற பாடப்பகுதியையும் வாசிக்கச் செய்யுங்கள். திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகிய இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிக் கூறப்பட்டுள்ளவை குறிப்புகளாகக் கட்டுரை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

பெரியபுராணத்தில் உள்ள ஒரு கதைப்பகுதி கூறப்பட்டுள்ளது. அந்தக் கதையை வாசித்துக் கண்டுபிடித்துக் கூறுங்கள் என்று வாசிக்கத் தூண்டுங்கள். சிறுசிறு வினாக்கள் கேட்டு வாசித்தலைப் பொருளுடையதாக்குங்கள்.

**கற்பின் சிகரம் யார்?**

**மாறனார் என்பவர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்?**

**அடியாருக்கு அவர் எவ்வாறு உணவளித்தார்?**

மாணவர்கள் கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடித்துக் கூறட்டும். கேள்வி – பதிலை வகுப்பறைக் குறிப்பேட்டிலும் எழுதட்டும். மதிப்பீட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**வாசித்தலின் இயற்கூறுகள்**

- சொற்களின் சரியான உச்சரிப்பு
- குரலில் ஏற்றத்தாழ்வு
- உணர்ச்சிக்கேற்ற பொருளுக்கேற்ற அழுத்தங்கள்
- நிறுத்திற்குறியீடுகளுக்கு ஏற்ப வாசித்தல்
- பொருளுணர்ந்து கற்பனை செய்து பார்த்தல்



**திருக்குறள் கண்டுபிடிப்போம்**

ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்கள் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன, அதைப் படித்துவிட்டோம். இதுபோல விருந்தோம்பல் என்ற அதிகாரத்திலும் பத்துக்குறட்பாக்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதவேண்டும். பாடப்பகுதியில் ஒரு குறள் கொடுக்கப்பட்டுள்ளது.

**(மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து)** செயல்பாட்டை எவ்வாறு ஆர்வமுள்ளதாக்கலாம்?

- திருக்குறள் புத்தகங்கள், மாணவர் பதிப்பாக மிகக் குறைந்த விலைகளில் கிடைக்கின்றன. அவற்றை வகுப்பில் பயன்படுத்துங்கள்.
- பள்ளி நூலகத் திருக்குறள்களையும் பயன்படுத்துங்கள்.

- குழுச் செயல்பாடாகக் கொடுக்கலாம்
- குறட்பாக்களையும் பொருளையும் கண்டுபிடித்துக் கூறட்டும். குறிப்பேட்டில் எழுதட்டும்.

**திருக்குறளின் புகழ்**

- அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி
  குறுகத் தறித்த குறள் - **திருவள்ளுவமாலை**
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
  வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - **பாரதியார்**
- அறிவுக்கு விருந்தாகும் திருக்குறளே - வள்ளுவன்
  ஆக்கி நமக்களித்த அரும்பொருளே -
  **திரை இசைப்பாடல்**
- யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
  வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
  பூமிதனில் யாங்கணுமே பிறந்த திலை;
  உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை - **பாரதியார்**

**திருக்குறள் தொகுப்பு உருவாக்கலாம்**

திருக்குறள் பற்றி ஒவ்வொரு மாணவரும் ஒரு தகவல் சேகரிப்பு நடத்தட்டும். அதைத் தொகுப்பாக வெளியிடலாம். தொகுப்பில் என்னென்ன இடம்பெறலாம்? மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். முடிவு செய்யுங்கள். வகுப்பில் கற்றுக்கொண்டவை, பிற இடங்களிலிருந்து தெரிந்து கொண்டவை போன்றவற்றைத் தொகுக்கட்டும்.

- திருக்குறள்
- வேறு பெயர்கள்
- உரையாசிரியர்கள் (புதிய, பழைய)
- பெருமைகள்
- திருக்குறள் கதைகள்
- திருக்குறளைப் பெருமைப்படுத்தும் பாடல்கள்/பாடிய புலவர்கள்

- திருவள்ளுவர் வரலாறு
- திருவள்ளுவர் பற்றிய கதைகள்
- படங்கள்
- புத்தகங்கள்
- செய்தித்தாள்களில் வரும் திருக்குறள் செய்திகள்
- எனக்குத் தெரிந்த திருக்குறள்கள்
- 
- 

நல்ல ஒரு தொகுப்பாகச் செய்ய உதவுவீர்கள் அல்லவா? படைப்புத் தொகுப்பில் உட்படுத்துங்கள்.

**கவனிக்க . . .**

- ஒரே அளவிலான தாளில் எழுதட்டும்
- எல்லோரும் ஒரே மாதிரி வடிவமைக்க வேண்டும்
- இடம் விட்டு அழகாக எழுதுதல்
- நான்கு பக்கங்களிலும் அழகுபடுத்துதல்
- பொருத்தமான அட்டை இடுதல் தலைப்பு கொடுத்தல்
- வாழ்த்துரை, அணிந்துரை, முன்னுரை சேர்த்தல்
- வகுப்பில் வெளியிடுதல்



## அனுபவக் குறிப்பு

இதை ஒரு தனிநபர் செயல்பாடாக நடத்துங்கள். பெரியபுராணக் கதையைப் பாடப்பகுதியில் இருந்து வாசித்தீர்கள் அல்லவா? அடியவர் வேடத்தில் வந்த சிவபெருமானுக்கு மாறனார் எவ்வாறெல்லாம் சிரமப்பட்டு உணவளித்தார் என்று கலந்துரையாடி, இதுபோல் உங்கள் பெற்றோர் வீட்டில் இல்லாத போது விருந்தினர்கள் வந்திருக்கலாம், அவர்களை எவ்வாறு உபசரித்தீர்கள், வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் வரவேற்று உபசரிப்பது நமது பண்பாடல்லவா? அப்படி நீங்கள் நடந்து கொண்ட உங்கள் அனுபவத்தைக் கூறுங்கள் என்று ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தைக் கூற வாய்ப்பு கொடுங்கள். பின்பு தாங்கள் கூறியதையே எனது அனுபவம் என்ற தலைப்பில் அனுபவக் குறிப்பாக எழுதட்டும். உங்கள் அனுபவத்தையும் எழுதி மாணவர்களிடம் வாசியுங்கள். உங்கள் அனுபவக் குறிப்பையும் மாணவர்கள் தங்களுடைய அனுபவக் குறிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். மேம்படுத்தி திருத்தி எழுதட்டும். படைப்புத் தொகுப்பில் (Portfolio) உட்படுத்தலாம்.

மாணவர்களுக்கு நாட்குறிப்பு எழுதும் பழக்கம் கீழ் வகுப்புகளிலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்குறிப்புப் பழக்கம் அனுபவக் குறிப்பு எழுதுவதற்கு உதவிகரமாக இருக்குமல்லவா? எனவே நாட்குறிப்பு எழுதும் பழக்கம் தொடர்வதற்கு ஊக்கம் அளியுங்கள்.



**ஒழுங்குபடுத்துவோம்**

குறட்பாக்களைத் தவறின்றி வாசிக்கவும், நினைவுகூர்ந்து மீண்டும் சொல்வதற்கும் உதவும் ஒரு செயல்பாடு இது. வகுப்பில் வார்த்தை விளையாட்டு போல ஓர் ஆர்வமான செயல்பாடாக இதை நடத்தலாம். எளிமையான எடுத்துக்காட்டுகளோடு தொடங்குங்கள்.

**என் ராஜா பெயர்** என்று கரும்பலகையில் எழுதி சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதி வாசிக்கச் செய்யுங்கள். **என் பெயர் ராஜா** என்று வாசிக்கட்டும்.

**நான் படிக்கிறேன் வகுப்பில் ஏழாம்.**

**தையல்காரர் எனது செய்கிறார் வேலை அப்பா**

இதுபோன்று பயிற்சிகள் கொடுத்துச் செயல்பாட்டுக்குள் செல்லுங்கள்.

- இரண்டு குறட்பாக்கள் மட்டுமே செயல்பாட்டுப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்கள் சரியாக எழுதட்டும்.
- தொடர்ந்து பாடப்பகுதியில் உள்ள எல்லாச் செயல்பாடுகளையும் இதுபோல மாற்றிக் கொடுத்து எழுதச் செய்யலாம்.
- வீட்டுச் செயல்பாடாகவும் செய்துவரச் சொல்லலாம் அல்லவா?
- புத்தகத்தைப் பார்த்துத் தவறுகளைத் திருத்தட்டும். எழுதட்டும்.

## நேர்மை

''விருந்தோம்பல் பற்றிய பெரிய புராணக் கதையையும் பிற இலக்கியங்கள் கூறும் கருத்தையும் வாசித்துப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? இனியவன் என்ற ஒரு மாணவனைப் பற்றிய கதை தான் இப்பகுதியில் உள்ளது. அதை வாசித்துப் பார்க்கலாம்'' என்று கூறிப் பாடப்பகுதியை வாசிக்கச் செய்யுங்கள். ஒரு சில வினாக்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். அதற்கான விடையைக் கண்டுபிடித்துக் கூறுங்கள் என்று பாடப்பகுதியை வாசிக்கச் சொல்லுங்கள். குழுச் செயல் பாடாகக் கொடுக்கலாம்.

**கதையை வாசிக்கத் தூண்ட . .**

- தலைப்பைப் பார்த்துக் கதையை ஊகித்து, வாசித்துப் பரிசோதித்தல்
- படத்தின் கருத்தை விளக்கும் பகுதிகளைக் கண்டுபிடித்தல்
- கதாப்பாத்திரத்தின் பண்புகளை விளக்கும் பகுதிகளை வாசித்துக் கண்டுபிடித்தல்
- கதையின் கருத்துக் கூறுதல்
- அருஞ்சொற்களைக் கண்டுபிடித்துப் பொருள் காணுதல்
- வினாக்கள் உருவாதல்
- பழமொழிகளின் பயன்பாட்டைக் கண்டுபிடித்தல்
- குறிப்புகள் எடுத்தல்

இனியவனிடம் அம்மா எத்தனை ரூபாய் கொடுத்தார்?

கீழே கிடந்த பொட்டலத்தில் இருந்தது எத்தனை ரூபாய்?

இனியவன் எப்படித் தன்னிடம் இருந்த பணத்தை இழந்தான்?

பாடப்பகுதியை வாசித்துக் கதையைப் புரிந்துகொள்ளட்டும். வினாக்களுக்கும் விடை காணட்டும்.

மேலும் சில செயல்பாடுகள் கொடுத்துக் கருத்துகளை எழுதச் செய்யலாமா?

இனியவனிடம் கிடைத்தது போல உன்னிடம் பணம் கிடைத்தால் என்ன செய்வாய்? என்று மாணவர்களிடம் கேளுங்கள். அவர்கள் கூறட்டும். எழுதட்டும்.



**பொன்மொழிகள் சேகரிக்கலாமா?**

நன்னடத்தை தொடர்பான பொன்மொழிகள்/பழமொழிகள் சேகரித்து வரச் சொல்லலாம்.

- **தாயிற்சிறந்த கோயிலுமில்லை**
  **தந்தை சொல் மிக்க மந்திரமில்லை**
- **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
- **கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே**
- **ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**
- **தீராக் கோபம் போராய் முடியும்**
-
-

சேகரிக்கட்டும். தொகுப்பாக வெளியிடட்டும் படைப்புத் தொகுப்பில் சேருங்கள்.

**ஆசிரியரிடம் இருக்க வேண்டிய சில மாதிரித் தொகுப்புகள்...**

**கதைகள்...**
**கற்பனைக் கதைகள்**
**அறிவுக் கதைகள்**
**நன்னெறிக் கதைகள்**
**காரணக் கதைகள்**
**புராணக் கதைகள்**
**நகைச்சுவைக் கதைகள்**

**பாடல்கள்**
**வர்ணனைப் பாடல்கள்**
**கதைப் பாடல்கள்**
**நாட்டுப்புறப் பாடல்கள்**

**படத்தொகுப்பு**
புலவர்கள், கவிஞர்களின் படங்கள், தகவல்கள், செய்திகள் . . .

## பொன் ஓணம்

பாடப்பகுதியை மாணவர்கள் வாசிக்கட்டும். ஓணவிழா பற்றிய நிறைய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. சிறுசிறு கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடிப் பாடப்பகுதியை மாணவர்கள் புரிந்துகொள்ளச் செய்யுங்கள்.

- ஓணத்தை ஏன் தேசிய விழா என்கிறோம்?
- ஓணம் பற்றிக் கூறும் சங்க இலக்கியம் எது?
- ஓணம் என்றாலே நினைவுக்கு வருவன எவை?
- ஓணம் எத்தனை நாட்கள் நடைபெறும்?
- ஓணத்துடன் தொடர்புடைய நாட்டுப்புறக் கலைகள் எவை?
- ஓணம் பற்றிய பழமொழி என்ன?
- ஓண விழாவிற்கான காரணக் கதை என்ன?

**ஆசிரியர் வாசிக்கும் போது கவனிக்க வேண்டியவை .**

- சொற்றொடர்களை நிறுத்தி நிறுத்தி பொருள் புரிய வாசித்தல்
- கருத்துக்கேற்ற உணர்ச்சியோடு வாசித்தல்
- உச்சரிப்புப் பிழையின்றி வாசித்தல்
- நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி வாசித்தல்

மாணவர்கள் பாடப்பகுதியை வாசிக்கட்டும். வினாக்களுக்கான விடைகளைக் கண்டுபிடிக்கட்டும். வாசித்தலைத் தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

### கேரளமும் ஓணமும்

ஓணவிழாவைப் பற்றி நிறைய விபரங்களைப் பாடப்பகுதியை வாசித்துத் தெரிந்துகொண்டோம். நமது வகுப்பில்/பள்ளியில் **ஓணவிழா** கொண்டாட வேண்டும். **ஓண விழா மலர் வெளியீடு** நடத்தவேண்டும். என்னென்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**முதலில் ஓண விழாக் கொண்டாட்டங்கள்**

- பள்ளி அலங்கரிப்பு
- அத்தப்பூ போட்டி
- விளையாட்டுப் போட்டிகள்
- மேடை நிகழ்ச்சிகள்

- ஆடல், பாடல்
- நாடகம்
- மாறுவேடப்போட்டி
  - மகாபலி மன்னன்
  - வாமனன்
- ஊஞ்சலாட்டம்
- ஓணம் தொடர்பான படங்கள் கண்காட்சி
- ஓண விருந்து

**கையெழுத்து அழகுபெற**

- ♦ சொற்களுக்கு உரிய வடிவத்துடன் எழுதுதல்
- ♦ சொற்களுக்கு இடையே போதிய இடைவெளி
- ♦ சொற்களின் உருவம். ஒரேமாதிரி
- ♦ நிறுத்தக்குறிகள் இடவேண்டும்
- ♦ போதிய இடம் விட்டுப் பெரிதாக எழுத வேண்டும்.

குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்று, விழா வெற்றி பெறச் செய்யலாம். உங்கள் வழிகாட்டல் மிக முக்கியம்.

தொடர்ந்து **ஓண மலர் வெளியீடு** – என்னென்ன செய்ய வேண்டும்? விழாவிற்கு நாம் செய்த செயல்பாடுகளை எல்லாம் அறிக்கையாக எழுதி வைத்திருப்போம்அல்லவா? அதையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதை ஒரு கையெழுத்துப் பத்திரிக்கையாக வெளியிடலாமா? எவ்வாறு திட்டமிடலாம்?

**மலர் தயாரிப்பது எப்படி**, அதை அழகுபடுத்துவது எப்படி? அதில் என்னென்ன பகுதிகள் இடம்பெற வேண்டும். அவற்றை எங்கிருந்து சேகரிக்கலாம், எவற்றையெல்லாம் புதியதாகப் படைக்கலாம் என்பவற்றை முடிவுசெய்து குழுவாக மலர் தயாரிக்கட்டும். இதழ்கள், பத்திரிக்கைகள் போன்றவற்றிலிருந்து ஓணம் பற்றிய செய்திகள், படங்கள், பாடல்கள் சேகரிக்கட்டும்.

சார்ட்டுத் தாளால் செய்யப்பட்ட நீளவடிவிலான புத்தகத்தைக் குழந்தைகளுக்குக் கொடுங்கள். தாங்கள் திரட்டிய **செய்திகள், கதைகள், துணுக்குகள், பாடல்கள், பொன்மொழிகள், படங்கள், குறிப்புகள், கட்டுரைகள்** ஆகியவற்றை அழகான **கையெழுத்தில் எழுதட்டும். சுற்றிலும் கோடுகள், சிறுபடங்கள் வரைந்து அழகுபடுத்தட்டும். வண்ணப்படங்கள் வரையட்டும். மாற்றுத் திறனாளிக் குழந்தை களுக்கும் வாய்ப்பு கொடுத்து உற்சாகப்படுத்துங்கள். பாராட்டுங்கள்.**

அந்த மலருக்கு நீங்கள் ஒரு நல்ல **முன்னுரை** எழுதுங்கள். **தலைமை ஆசிரியர், சிறப்புரை** எழுதி மலரை வெளியிடட்டும். **வெளியீட்டு நாளை** முடிவு செய்யுங்கள். மலர் வெளியீட்டு விழாவிற்கான கரும்பலகை **அறிவிப்பு, துண்டுப்பிரசுரம், சுவரொட்டி** போன்றவை தயாரித்து விழாவைச் சிறப்புறச் செய்யலாம் அல்லவா? மலரைப் படைப்புத் தொகுப்புக்கு உட்படுத்துங்கள்.

## நாடெல்லாம் திருவிழா

கேரளத்தில் நாம் ஓணவிழா கொண்டாடுவதுபோல நமது இந்தியத் திருநாட்டில், கொண்டாடப்படும் ஒரு சில விழாக்கள் பற்றிய செய்திகள் இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. வாசித்துக் கண்டுபிடிக்கலாமா என்று வாசிக்கத் தூண்டுங்கள்.

- தமிழகத்திற்கே உரித்தான விழா எது?
- இந்தியாவை ஒருங்கிணைக்கும் பண்டிகை
- டிசம்பர் 25-ம் தேதி கொண்டாடப்படும் பண்டிகை
- புத்த பூர்ணிமா கொண்டாடப்படும் நாள்
- 

வாசித்துப் புரிந்துகொண்டு நிறைவு செய்யும் வகையில் ஓர் அட்டவணை கொடுக்கலாமா? நிறைவு செய்யட்டும்.

| பண்டிகையின் பெயர் | சிறப்பு | மாதம் |
|---|---|---|
| ஹோலிப் பண்டிகை | | |
| விஷு | | சித்திரை |
| தீபாவளிப் பண்டிகை | | |
| கிறிஸ்துமஸ் | | |
| பொங்கல் பண்டிகை | உழவர் பண்டிகை | |
| புத்த ஜெயந்தி | | |
| ரம்சான் | | |

## புதிய சொற்கள் கண்டுபிடிக்கலாம்

ஒவ்வொரு பண்டிகையுடனும் தொடர்புடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதட்டும்

**தீபாவளி**

- பட்டாசு
- பலகாரம்
- புத்தாடை
- தீபங்கள்
- வாழ்த்துக்கள்

**கிறிஸ்துமஸ்**

- கேக்
- கிறிஸ்துமஸ் தாத்தா
- பட்டாசு
- புத்தாடை
- பரிசுகள்

**பொங்கல்**

- கரும்பு
- பொங்கல்
- ஜல்லிக்கட்டு
-
-

**ரம்சான்**

- நோன்பு
- தானம்
- புத்தாடை
-
-

ஒவ்வொரு விழா/பண்டிகையும் பற்றிய சொற்களைக் கண்டுபிடித்த பிறகு அவற்றின் அடிப்படையில் கருத்துகளைச் சேகரித்து ஒவ்வொரு விழா பற்றியும் சிறுகுறிப்பு எழுதட்டும். எழுதுதலைத் தொடர் மதிப்பீட்டுக்குச் சேருங்கள்.

## பூக்கோலம் அமைக்கலாம்

அதே போன்றே ஓணம் பற்றிய சொற்களால் இச் செயல்பாட்டை நிறைவு செய்யட்டும். வகுப்புக் குறிப்பேட்டிலும் எழுதட்டும்.

## வாழ்த்து அட்டை தயாரிப்போம்

உங்கள் வீட்டில் என்னென்ன விழாக்கள் கொண்டாடுவீர்கள்? எப்படி எல்லாம் கொண்டாடுவீர்கள் என்று கேட்டுக் கலந்துரையாடலைத் தொடங்குங்கள்.

முன்பு வாழ்த்துக்களைத் தபால், தந்தி மூலம் பரிமாறிக் கொண்டார்கள். இப்பொழுது தொழில் நுட்ப வளர்ச்சியால் தொலைபேசி, அலைபேசி, தொலைக்காட்சி, கணினி மூலமாக வாழ்த்துகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

**SMS - SHORT MESSAGE SERVICE**

**குறுஞ்செய்திச் சேவை**

- ♦ புத்தாடை அணிவோம்
- ♦ பலகாரம் சாப்பிடுவோம்
- ♦ பாயாசம் வைப்போம்
- ♦ விருந்துக்குக் கூப்பிடுவோம்
- ♦ பிறந்த நாளுக்கு மிட்டாய் கொடுப்போம்
- ♦ தூரத்தில் இருப்பவர்களுக்கு என்ன செய்யலாம் என்று கேளுங்கள். வாழ்த்துகள் என்று மாணவர்கள் கூறட்டும். எழுதட்டும்.

| **எதற்கு வாழ்த்தலாம்? (நீங்கள் எழுதுங்கள்)** | | **எப்படி வாழ்த்தலாம்? (மாணவர்கள் எழுதட்டும்)** |
|---|---|---|
| ▪ பிறந்த நாள் | – | நீடூழி வாழ்க |
| ▪ திருமண நாள் | – | மலரும் மணமும் போல வாழ்க |
| ▪ விழாக்கள் | | |
| • கிறிஸ்துமஸ் | – | |
| • தீபாவளி | – | |
| • பொங்கல் | – | |

**வாழ்த்துச் செய்திகளை வாழ்த்து மடலாக எவ்வாறு தயாரித்து அனுப்பலாம்?**

- ♦ வாழ்த்துச் செய்திகளைச் சிறுசிறு கவிதை வடிவில் எழுதட்டும்.
- ♦ சார்ட் தாளை வெட்டியெடுத்து இரண்டாக மடித்துப் பக்கங்களை அழகு படுத்துதல்
- ♦ முதல் பக்கத்தில் பண்டிகையின் பெயர்
- ♦ கிறிஸ்துமஸ் வாழ்த்து
- ♦ பொங்கல் வாழ்த்து
- ♦ உள் பக்கங்களில் கவிதை வரிகள் எழுதுதல்
- ♦ நீங்கள் செய்து வைத்துள்ள மாதிரிகளைக் காட்டி மாணவர்களுக்கு வழி காட்டுங்கள். நண்பர்களுக்கு அனுப்பலாமே.



**பாடல்கள் சேகரிப்போம்**

புத்தகத்தில் ஓணம் பற்றிய ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதை மெட்டமைத்துப் பாடுங்கள். இதைப் போல ஓணம், தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் போன்ற விழாக்களோடு தொடர்புடையப் பாடல்களைச் சேகரித்து வரச் சொல்லுங்கள்.

## எனக்குப் பிடித்த பண்டிகை

பல பண்டிகைகளைப் பற்றி ஏராளமான செய்திகளைத் தெரிந்துகொண்டோமல்லவா? எனக்குப் பிடித்த பண்டிகை என்ற தலைப்பில் கட்டுரை எழுத வேண்டும். எப்படி எழுதலாம். கலந்துரையாடுங்கள். ஏற்கனவே பண்டிகைப் பாடல்கள் எழுதி இருக்கிறார்கள். சிறு குறிப்புகள் எழுதி உள்ளனர். ஒவ்வொரு பண்டிகை தொடர்பான மாதங்கள், சிறப்புகள், சொற்கள் எழுதி இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் நினைவில் கொண்டு கட்டுரை எழுத வேண்டும். கீழ்வரும் படிகளைப் பின்பற்றலாமா?

**கட்டுரை**

- ♦ ஒரு பொருளைப் பற்றி முழுமையான விளக்கம்
- ♦ காரண காரியத்தொடர்போடு பிழையின்றி விளக்குதல்
- ♦ இயல்பான, சரளமான, விளக்கமான உரைவடிவம்
- ♦ உண்மை, தெளிவு, எளிமை
- ♦ தனித்தனி உபதலைப்புகள்

- இரண்டோ மூன்றோ பண்டிகைகளின் பெயரைக் கூறுங்கள்.
- குழந்தைகள் ஒரு பண்டிகையைத் தேர்ந்தெடுக்கட்டும்.
- அதனுடன் தொடர்புடைய துணைக்கருத்து களைப் பட்டியல் செய்யட்டும்.
- மையக் கருத்தையும் துணைக் கருத்துக்களையும் மாணவர்களுடன் கலந்துரையாடிக் காண வேண்டும்
- பிறகு வீட்டுச் செயல்பாடாகக் கட்டுரை எழுதி வரட்டும்

கட்டுரையை வாசித்து யாருடையது சிறப்பானது? ஏன்? என்று விவாதிக்க வேண்டும். முதல் பத்தி எதைப் பற்றி? எப்படி? துணைக்கருத்துகளுள் எது முதலில்? ஏன்? கட்டுரையை எப்படி முடிக்க வேண்டும் (முடிவுரை) என்று கேட்டு முழுமை பெறச் செய்யலாம்? இதை எழுதுதலுக்கான தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதுடன் மாணவர்களின் படைப்புத் தொகுப்பிலும் சேர்த்துக் கொள்ளலாம்.

### இலக்கணம் ஆகுபெயர்

ஆசிரியர் - மாணவர் உரையாடல் போன்றே இலக்கணப் பகுதி அமைக்கப் பட்டுள்ளது.

ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு தொன்று தொட்டே ஆகிவருவது ஆகு பெயர் எனப்படும்.

இவை 1. பொருளாகு பெயர் 2. இடவாகு பெயர் 3. காலவாகு பெயர் 4. சினையாகு பெயர் 5. குணவாகு பெயர் 6. தொழிலாகு பெயர் 7. அளவையாகு பெயர் 8. சொல்லாகு பெயர் 9. தானியாகு பெயர் 10. கருவியாகு பெயர் 11. காரியவாகு பெயர் 12. கருத்தாவாகு பெயர் 13. உவமையாகு பெயர் 14. இருமடியாகு பெயர் 15. மும்முடியாகு பெயர் 16. இரு பெயரொட்டாகு பெயர் 17. அடையடுத்தவாகு பெயர் எனப் பல வகைப்படும்.

இவற்றுள் முதல் 6 மட்டுமே ஏழாம் வகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளுடன் மேலும் சில எடுத்துக்காட்டுகள் கொடுத்துப் புரிய வைப்பீர்கள் அல்லவா?

# அலகு மதிப்பீடு (மாதிரி)

## செயல்பாடு 1

உன் வகுப்பு நண்பர்கள் இருவரும், உனது வகுப்பாசிரியரும் நீ எதிர் பாராத நேரத்தில் உன் வீட்டிற்கு வருகிறார்கள். அவர்கள் வரும் போது உன் பெற்றோரும் வீட்டில் இல்லை. நீ அவர்களை எவ்வாறு வரவேற்பாய்? உன் **அனுபவத்தைக் குறிப்பாக** எழுது.

## செயல்பாடு 2

பள்ளியில் ஓணவிழாவையொட்டி ஒரு கட்டுரைப்போட்டி நடைபெறுகிறது. 'கேரளத்தின் தேசிய விழா' என்ற தலைப்பில் **கட்டுரை** எழுதுவதற்குப் பிரியாவிற்கு உதவுங்கள்.

## செயல்பாடு 3

கீழ்க் காணும் பொருளுக்குப் **பொருத்தமான குறட்பாக்களை** எழுதுங்கள்.

- ஒழுக்கம் உள்ளவரே உயர் குடியினர். ஒழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.
- பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது, அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
- உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர் எவ்வளவு தான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்.

## செயல்பாடு 4

**ஒரு நூற்குறிப்பு** எழுதுங்கள் - திருக்குறள்

## செயல்பாடு 5

பிறந்தநாள் விழா கொண்டாடும் உன் நண்பனுக்கு ஒரு பிறந்த நாள் வாழ்த்து தயாரித்து அனுப்ப வேண்டும். தயார் செய்க. அழகான ஒரு வாழ்த்துக் கவிதையும் அதில் இடம் பெறுமல்லவா?

* * *

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

1. **அனுபவக் குறிப்பு**
   - வாசிப்பவர் மன உணர்ச்சியைத் தூண்டக்கூடிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து வெளியிட
   - கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ள வெளியீடு, மொழிநடை
   - தனது கண்ணோட்டத்தையும் தகுந்த முறையில் சேர்த்து நடுநிலையோடு வெளியிடுதல்

2. **கட்டுரை**
   - பாடப்பொருளோடு தொடர்புடைய கருத்துகளின் முழுமை வடிவம்
   - பாடப்பொருளோடு தொடர்புடைய கருத்துகளை அலசி ஆராய்ந்து சுயகருத்துகளைச் சேர்த்துப் படைத்தல்.

3. **நூற்குறிப்பு**
   - தலைப்பு, நூலாசிரியர்.
   - பொருள், உள்ளடக்கம்.
   - பதிப்பகம், விலை.

4. **வாழ்த்து அட்டை**
   - வடிவமைப்பு.
   - தொடர்பான படங்கள்.
   - கவிதை வடிவிலான வாழ்த்து.